**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 70/2020**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 03.03.2026 | | |
| பெயர்: | ராமகிருஷ்ணன் (PW–2 Chief ) | தகப்பனார் பெயர்: | வரதராஜன் |
| கிராமம்: | செம்பனார்கோயில் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | துணை மேலாளர் | வயது : | 36/2026 |

**முதல் விசாரணை : 03.03.2026**

நான் வாதி வங்கியின் திருவெண்காடு கிளை துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 24.11.2012 தேதியிட்ட கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்
2. 29.01.2013 தேதியிட்ட கடன் உடன்படிக்கையின் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்
3. 29.01.2013 தேதியிட்ட கடன் ஏற்பாட்டு கடிதம் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்
4. 21.01.2016 தேதியிட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும்
5. 10.01.2019 தேதியிட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. 29.07.2019 தேதியிட்ட கணக்கு பதிவேடு உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.